DINAMALAR 06/06/17

# போலி ஐ.எஸ்.ஐ., முத்திரை குடிநீர் நிறுவனங்கள் சிக்கின

சென்னை, ஜூன் 6–

ஐ.எஸ்.ஐ., முத்திரையை முறைகேடாக பயன்படுத்திய, மூன்று குடிநீர் நிறுவனங்கள் மீது, இந்திய தர நிர்ணய ஆணையம் நடவடிக்கை எடுத்துள்ளது.

இந்திய தர நிர்ணய ஆணைய அதிகாரிகள், ஜூன், 2, 3ல், மதுரை, நெல்லை, துாத்துக்குடி மாவட்டங்களில் உள்ள, அடைக்கப்பட்ட கேன் குடிநீர் உற்பத்தி நிறுவனங்களில் ஆய்வு செய்தனர்.

அப்போது, மதுரை, கொடிமங்கலத்தில் உள்ள, மீனாட்சி டிரேடர்ஸ்; நெல்லை, மூதுாரில் உள்ள, ரோஸ் இன்டர்நேஷனல்; துாத்துக்குடி, சுப்ரமணியபுரத்தில் உள்ள, ரோஸ் இன்ஜினியரிங் ஆகிய மூன்று நிறுவனங்களிலும், முறைகேடாக, ஐ.எஸ்.ஐ., முத்திரை பயன்படுத்தப்பட்டது தெரிய வந்தது.

அங்கிருந்த குடிநீர் கேன்கள், பாட்டில்கள், லேபிள்கள் பறிமுதல் செய்யப்பட்டன. நிறுவனங்கள் மீது வழக்கு பதிந்து, சட்ட ரீதியான நடவடிக்கை எடுக்கப்படும் என, இந்திய தர நிர்ணய ஆணையம் தெரிவித்துள்ளது.

# போலி முத்திரையுடன் குடிநீர் கேன்கள் விற்பனை

■ சென்னை

இந்திய தர நிர்ணய அமைவனம் நேற்று வெளியிட்ட செய்திக் குறிப்பில் கூறியிருப்பதாவது: மதுரை, திருநெல்வேலி மாவட்டம் முத்தூர், தூத்துக்குடி மாவட்டத்தில் திருச்செந்தூரில் இயங்கி வந்த 3 நிறுவனங்கள் ஐஎஸ்ஐ முத்திரையை உரிய அனுமதியின்றி பயன்படுத்துவதாகத் தகவல் கிடைத்தது. அந்த நிறுவனங்கள் மீது நடவடிக்கை எடுக்கவும் பரிந்துரைக்கப்பட்டுள்ளது.

ஐஎஸ்ஐ முத்திரையைப் போலியாகப் பயன்படுத்தினால் 044-22541442, 22542519, 22541216 ஆகிய தொலைபேசி எண்களை தொடர்புகொண்டோ, புகார் குறித்த விவரங்களை sro@bis.org.in என் மின்னஞ்சல் முகவரியிலோ தெரிவிக்கலாம்.

இதுகுறித்து கூடுதல் விவரங்களுக்கு இந்திய தர நிர்ணய அமைவனத்தின் www.bis.org.in என்ற இணையதளம் மூலம் அறிந்து கொள்ளலாம் என்று அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# ...மாவட்டங்களில் குடிநீர் பாட்டில் விற்கும் கம்பெனிகளில் அதிரடி சோதனை

## 556 லிட்டர் குடிநீர் பாட்டில்கள் பறிமுதல்

சென்னை, ஜூன்.6–

இந்திய தரக்கட்டுப்பாட்டு ஆணையத்தின் தென் மண்டல அலுவலகம் வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பில் கூறப்பட்டுள்ளது:–

தமிழகத்தின் சில இடங்களில் குடிநீர் பாட்டில்கள் விற்பனை செய்யும் சில கம்பெனிகள் ஐ.எஸ்.ஐ. தரச்சான்று முத்திரையை தவறாக பயன்படுத்தி வருவதாக இந்திய தரக்கட்டுப்பாட்டு ஆணையத்தின் சென்னை மண்டல அதிகாரிகளுக்கு ஏராளமான புகார்கள் வந்தது.

இதையடுத்து இந்திய தரக்கட்டுப்பாட்டு ஆணைய அதிகாரிகள், மதுரை மாவட்டம் கொடிமங்கலம், நெல்லை மாவட்டம் பாளையங்கோட்டை அருகே உள்ள மூதூர் மற்றும் தூத்துக்குடி மாவட்டம் ஸ்ரீவைகுண்டம் அருகே உள்ள சுப்பிரமணியபுரம் ஆகிய இடங்களில் குடிநீர் பாட்டில்கள் உற்பத்தி செய்யும் பல்வேறு கம்பெனிகளில் அதிரடி சோதனை நடத்தினார்கள்.

அப்போது சில கம்பெனிகள் தாங்கள் விற்பனை செய்யும் குடிநீர் பாட்டில்களில் போலி ஐ.எஸ்.ஐ. தரச்சான்றை ஒட்டியது கண்டுபிடிக்கப்பட்டது. இதையடுத்து 3 மாவட்டங்களையும் சேர்த்து அங்கு உள்ள கம்பெனிகளில் போலி ஐ.எஸ்.ஐ. தரச்சான்று ஒட்டப்பட்டு விற்பனைக்கு வைக்கப்பட்டிருந்த 556 லிட்டர் குடிநீர் பாட்டில்கள் பறிமுதல் செய்யப்பட்டது.

அந்த கம்பெனிகளின் உரிமையாளர்கள் மீது உரிய நடவடிக்கை எடுக்கப்படும். தவறு செய்தவர்களுக்கு ஒரு வருட சிறை தண்டனை அல்லது ரூ.50 ஆயிரம் அபராதம் அல்லது இந்த இரண்டையும் சேர்த்து விதிக்க, இந்திய தரக்கட்டுப்பாட்டு சட்டத்தில் இடம் உள்ளது.

இவ்வாறு அதில் கூறப்பட்டுள்ளது.

सरकारी ब्रांड का दुरुपयोग

# आईएसआई मार्का के दुरुपयोग पर कार्रवाई

## मदुरै, तिरुनेलवेली और तूतीकोरिन जिलों में

पत्रिका न्यूज़ नेटवर्क
rajasthanpatrika.com

**चेन्नई.** भारतीय मानक ब्यूरो ने पैकज बंद पेयजल पर जाली आईएसआई मार्का के दुरुपयोग पर मदुरै, तिरुनेलवेली और तूतीकोरिन में छापेमारी की।

दक्षिण क्षेत्रीय कार्यालय से अधिकारियों की एक टीम ने आईएसआई मार्का के संदिग्ध दुरुपयोग की गोपनीय सूचना प्राप्त होने के बाद कदम उठाते हुए मदुरै, तिरुनेलवेली और तूतीकोरिन जिलों में कई स्थानों पर प्रवर्तन खोज और जब्ती अभियान चलाया।

इस दौरान मीनाक्षी ट्रेडर्स मदुरै में छापेमारी में जाली लाइसेन्स और एक लीटर की बोतल के 13 बॉक्स जब्त किए गए। इसके अतिरिक्त अन्य जगहों पर भी छापेमारी की गई।

# गोपनीय सूचना पर आईएसआई मार्का टीम ने की छापेमारी

**चेन्नई।** यहां भारतीय मानक ब्यूरो के दक्षिणी क्षेत्रीय कार्यालीयन टीम ने अभियान चलाकर प्रवर्तन खोज व जब्ती की। ब्यूरो ने गोपनीय सूचना पर पेकेज बंद पेयजल में 3 जाली लाइसेंस के साथ आईएसआई मार्क के दुरुपयोग पर मदुरै, तिरुनलवेली व तूतिकोरीन में कई स्थानों पर छापेमारी अभियान के तहत कार्रवाई की गई। ब्यूरो से प्राप्त जानकारी के मुताबिक काडिमंगलम में मीनाक्षी ट्रेडर्स से रियो अक्वा के नाम से जाली एक लीटर बोतल के 13 बॉक्स, मट्टूर-पलायमकोट्टई में मैसर्स रोज इंटरनेशनल में ब्रांड विनय एक्वा के नाम के साथ जाली लाइसेंस सहित एक लीटर की 80 बोतल जब्त की गई। वहीं मैसर्स रोज इंजीनियरिंग फर्म सुब्रमणिपुरम श्रीवैकुंडमनगर में छापा मार कर ब्रांड इस्टेना के नाम के साथ 20 लीटर के 16 पेट जार जब्त किए गए। ब्यूरो के अधिनियम 1986 के (धारा 33) के तहत उल्लंघन के विरुद्ध दक्षिण क्षेत्रीय कार्यालय द्वारा कार्रवाई की जा रही है।